# ஈரோடு மாவட்ட செய்திகள்

## இன்று காலிங்கராயன் தினவிழா

# பாசனப்பகுதிகளில் விவசாயிகள் பொங்கல் வைத்து வழிபாடு

சிவகிரி,ஜன.18-

சுமார் 750 ஆண்டுகள் பழமைவாய்ந்த காலிங்கராயன் வாய்க்கால் 1271ம் ஆண்டு வெட்ட தொடங்கி 1283ம் ஆண்டு முடிக்கப்பட்டது. 90 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்த வாய்க்கால் பவானியில் தொடங்கி கொடுமுடியை அடுத்துள்ள ஆவுடையார் பாறையில் முடிவடைகிறது.



காலிங்கராயன்

இந்த வாய்க்காலை மக்கள் பயன்பாட்டுக்காக அர்ப்பணித்த தினம் இன்று (தை 5ம் தேதி) வாய்க்காலை வெட்டிய காலிங்கராயனுக்கு நன்றி செலுத்தும் வகையில் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்குட்பட்ட விவசாயிகள் பஞ்சலிங்கபுரத்தில் தொடங்கி, பாசூர், கிளாம்பாடி, மலையம்பாளையம், வெள்ளோட்டாம்பரப்பு, ஊஞ்சலூர், பனப்பாளையம். வெங்கம்பூர், கொடுமுடி, உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட ஊர்களில் இன்று (18ம்தேதி) காலை 7 மணிமுதல் 8.30 மணிக்குள் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். மேலும் விளைச்சல் செழிக்க வேண்டி பெண்கள் முளைப்பாரி எடுத்து வந்து வாய்க்காலில் விட்டு வழிபாடு செய்கிறார்கள். நிகழ்ச்சியில் காலிங்கராயன் குடும்ப வாரிசுதாரர்கள் கலந்து கொள்கின்றனர்.